[16th April 1960

(ஆ) எல்லா மருத்துவ மனைகளிலும், **Operation theatres** களை ஏர் கண்டிஷன் செய்ய எவ்வளவு காலம் பிடிக்கும் ?

(இ) வேலூர் மாவட்டத் தலைமை மருத்துவ நிலையத்தின் ஆபரேஷன் தியேட்டர் எப்போது ஏர் கண்டிஷன் செய்யப்படும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) None, Sir.

(*b*) There is no consolidated scheme for the air-conditioning of the operation theatres in Government hospitals. It has to be taken up only gradually consistent with the financial resources available. The air-conditioning of operation theatres in three City hospitals has so far been sanctioned.

(*c*) The question is still under the consideration of the Director of Medical Services, Madras.

Manufacture of cheap-radio sets

* 696 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) குறைந்த விலையில் ரேடியோ செட்டுகள் தயாரிக்கும் வேலை எந்த அளவில் வெற்றி பெற்றிருக்கிறது ?

(ஆ) அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) The information is being collected.

Representation from leaders of taxi drivers

* 697 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the leaders of the taxi drivers made any representation to the Government recently; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) The representation relates to the following requests:—

(i) Application of the Minimum Wages Act and the Industrial Disputes Act to taxi and auto-rickshaw drivers ;

(ii) implementation of the terms of agreement, dated 21st August 1959, by the taxi owners ;

(iii) issue of clear instructions to the police regarding parking of taxis, taxi-stands, seizure of registration certificates and driving licence ;

(iv) fixing of meter on the right side of the vehicle ; and

(v) issue of instructions to the Regional Transport Authority for holding a regular enquiry when examining complaints against drivers.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that due to frequent strikes by the taxi-drivers, passengers are inconvenienced and they are left, as a matter of fact, in the middle of the road

16th April 1960]

during the strike and if so, what steps the Government propose to take to prevent such frequent strikes and also to see that passengers are taken to their destination before the strike begins?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member is aware that there is no law in this country prohibiting strike. Strike causes inconvenience and public opinion must assert itself.

MR. SPEAKER : Questions are over

[*Note* —**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member**].

II—CALLING ATTENTION TO THE FAILURE OF THE GOVERNMENT TO TAKE OVER FROM ANDHRA PRADESH GOVERNMENT THE LIMESHELL PITS BELONGING TO THE MADRAS STATE.

MR. SPEAKER: I have received notice under rule 41 from the hon. Member, Srimathi K. Kamalambujammal, calling the attention of the Hon. the Minister for Industries to a matter of urgent public importance, viz., failure of the Government to take over from the Andhra Pradesh Government the limeshell pits which belong to the Madras State.

SRIMATHI K. KAMALAMBUJA AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை மாநிலத்திற்குச் சொந்தமாகவுள்ள சுண்ணாம்புக்கல் பிரதேசங்களை ஆந்திர மாநிலம் இன்னும் தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு வருமானங்களைக் கொண்டு போகிறார்கள் என்பதை கனம் அமைச்சர் ஞாபகத்திற்குக் கொண்டுவருவதற்காக இப்போது இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறேன்.

நம்முடைய ராஜ்யப் பிரிவினைக்கு முன்னர் **1945**-ம் ஆண்டு நிர்வாக சௌகரியம் காரணமாக இந்த கிளிஞ்சல் எடுப்பு பிரதேசங்களெல்லாம் செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்ததை நெல்லூர் மாவட்டத்தோடு இணைக்கப் பட்டிருக்கிறது. கேரளமும், ஆந்திரமும் பிரிக்கப்படுவதற்கு முன்னால் ஒரே மாகாணமாக இருந்த காரணத்தினால் எல்லா பிரதேசங்களும் ஒரே இடத் தில் ஒரே நிர்வாகத்தில் இருப்பது நல்லது என்ற ஒரே காரணத்திற்காக செய்யப்பட்ட ஏற்பாடு இப்போது மிகவும் சிக்கலை உண்டாக்கி நம்முடைய மாகாணத்திற்கு வரவேண்டிய வருமானத்தை பாதிக்கக்கூடிய அளவுக்கு வந்திருக்கிறது. **1953**-ம் வருஷம் ராஜ்யத்தை பிரிக்கும்போது நம்முடைய அரசாங்கம் இதிலே அக்கரை செலுத்தி நமக்குச் சேரவேண்டிய இந்தப் பிரதேசங்களை நம்முடைய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர ஏற்பாடு செய் திருக்க வேண்டும். இந்தப் பிரதேசங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தின் வட பகுதியில் இருப்பதால் இது எல்லைத் தகராறுக்கு உட்பட்ட பிரதேசங் களோடு சம்பந்தப்பட்டதுமல்ல. **1945**-ம் ஆண்டில் நிர்வாக வசதி காரண மாகச் செய்த ஏற்பாடுதான். ஆனால் இது இப்போது அவர்களுடைய நிர்வாகத்தின்கீழ் இருக்கிறது. ஏறக்குறைய **1** லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடியது, இப்போது ஆந்திர மாநிலத்தோடு சேர்ந்திருக்கிறது. ஆகவே இந்தப் பிரதேசங்களை நம் சென்னை அரசாங்கம் உடனடியாக சென்னை மாநிலத்தோடு சேர்க்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இந்தப் பிரதேசங்களையொட்டி நெல்லூர் ஜில்லாவிலே, சூலூர்பேட்டையில் கடந்த மாதம் **25**-ம் தேதி, இவைகளை ஏலத்தில் விடுவதாக ஆந்திர அரசாங்கத் தால் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. இதை நிறுத்தவேண்டுமென்று தான் கனம் அமைச்சர் அவர்களுக்கு ஒரு மனுவும் கொடுத்திருந்தேன். அதன்பேரில் பொன்னேரி தாசில்தார் சூலூர்பேட்டைக்குச்சென்று பரிசீலனை செய்ததாகத் தெரிகிறது. என்ன காரணத்தினாலோ **25**-ம் தேதி நடக்க வேண்டிய ஏலம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நமது அர சாங்கம் ஆந்திர அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லி நமக்கே உரிமையான இந்தப் பிரதேசத்தில்—எல்லைப் பிரச்னைக்கு உட்படாத இந்தப் பிரதேசத் தில்—ஆதிக்கம் செலுத்துவது சரியல்ல என்று எடுத்துச் சொல்லி, நியாய மான முறையில் தீர்வு காண முயற்சி செய்யவேண்டும். நியாயமாக